
# தெய்வீக நன்முத்துக்கள்




## அவதார் மெஹெர் பாபா

Tamil Series No: 2

# DEIVEEKA NALMUTHUGAL

## Messages dictated by
## AVATAR MEHER BABA

*Compiled by: V. Sita Ramayya*

*Tamil Translation by: K. Gopalan*

*Edited by: T. Siva Chidambaram*

Words of Meher Baba are Copyright © 1997,
Avatar Meher Baba P. P. C. Trust, Ahmednagar

Tamil Version Copyright © 1997,
Avatar Meher Baba Tamilnadu Centre, Madras

*Published by:*

**Avatar Meher Baba Tamilnadu Centre**
36, East Mada Street,
Tiruvanmiyur,
Madras - 600 041

# தெய்வீக நன்முத்துக்கள்

## அவதார் மெஹெர் பாபா
## வழங்கிய அருளுரைகள்


தொகுத்தவர்
**வி.சீதா ராமைய்யா**

மொழி பெயர்த்தவர்
**கே.கோபாலன்**

சீரமைத்தவர்
**த. சிவசிதம்பரம்**



**அவதார் மெஹெர் பாபா**
**தமிழ்நாடு மையம்,**
சென்னை, இந்தியா.

# முகவுரை
# (Preface)

மனித இனத்தைை விழிப்புறச் செய்வதற்கெனவே, சுமார் 700லிருந்து 1400 ஆண்டுகளுக்கு ஒரு முறை இவ்வுலகின் வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு பெயர்களில், கடவுள் மனிதனாகப் பிறக்கிறார். இதுகாறும் சொராஸ்டிரராக, ஸ்ரீராமனாக, ஸ்ரீகிருஷ்ணனாக, புத்தபிரானாக, ஏசு கிருத்துவாக, முகமது நபியாக அவர் அவதரித்திருக்கிறார்.

சுவாமி விவேகானந்தா அவர்கள், 19.9.1893 அன்று சிக்காக்கோ நகரில் கூடிய உலக மதங்களின் பேரவையில் உரையாற்றும் போது சொன்னதாவது:

"கீழைவானத்தில் ஒரு விண்மீன் தோன்றியது; அது மேற்கு நோக்கி ஒரு சீராக நகர்ந்து, உலகத்தை ஒரு முறை சுற்றிவரும் வரை சில நேரங்களில் ஒளி மங்கியும், பிற நேரங்களில் ஒளி மிகுந்தும்.

காணப்பட்டது. அது, மீண்டும் கீழைத் தொடுவானத்தில், சான்போ எல்லையில், இதற்குமுன் எப்போதும் கண்டிராத அளவில், ஆறரை மடங்குப் பேரொளி யுடன் எழுந்துள்ளது; மனித உருவில் கடவுள் பிறக்கப்போகும் நிகழ்ச்சியை அந்த விண்மீன் எழுச்சி எடுத்துக் காட்டுவதாயுள்ளது.

சுவாமி விவேகானந்தர் அவர்கள் அவ்வாறு வருமுன் உரைத்ததற்கேற்ப, முழுமுதற் கடவுளானவர் பேரருள் கொண்டவராய், 25.2.1894 அன்று மெஹெர் பாபாவின் உருவில் இந்நில வுலகில் அவதாரம் செய்தார்.

சுழன்றுவரும் கால வட்டத்தில், மெஹெர் பாபா அவர்கள் முகமது நபி நாயகத்திற்குப் பின்னர் அவதார நிறைவாக விளங்குகிறார்கள்.

அவதார் மெஹெர் பாபா அவர்கள் 10.7.1925லிருந்து, அவர் மறைந்த நாளான

31.1.1969 வரை மௌன நிலையில் இருந்தார்கள். அவ்வாறு 44 ஆண்டுகள் மௌனமாயிருந்தாலும், மனித சமுதாயத் தின் நலன் கருதி, அனேக அருளுரை களை வழங்கி வந்தார்கள். அவை அனைத்தும், எழுத்துப் பலகையில் காட்டுவதன் மூலமும், தமக்கேயுரிய முகக்குறிப்புகளாலும், கைச்சைகை களாலும் இவ்வுலகுக்கு வெளிப்படுத்தி அருளப்பட்டன.

மெஹெர்பாபா அவர்கள், இவ்வுலகில் தம் அவதாரத்திருப்பணியை ஆற்றி வருகையில், புதிய சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் வகையில், மனித இன மேம்பாட்டுக்காக, தம் உள்ளுணர்வு ஆதாரத்தளங்களிலிருந்து கொண்டு தம் பணியினை இயக்கி வந்தார்கள். மனித இதயத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி, அதன் வாயிலாக உலகந்தழுவிய சகோ தரத்துவத்தையும் அமைதியையும் மனித சமுதாயத்தில் மலர்விக்கும் ஒரு

பொற்காலத்தை உருவாக்கி, மக்கள் நல்வாழ்வை பெற்றுய்வதற்காக தெய்வீக வழிகாட்டியென விளங்கினார்கள். பிறப்பு இறப்பு என்னும் முடிவற்ற இந்தச் சூறாவளியிலிருந்து நம்மை நாமே விடுவித்துக் கொள்ள அவர்கள் நன்னெறி காட்டித் திகழ்ந்தார்கள்.

மெஹெர் பாபா கூறியது :

"மெஹெராபாத்தில் நான் ஆற்றவுள்ள பணியாவது, ஆன்மீகக் கால்வாய்களை உருவாக்கி, அவற்றின் இருமருங்குக் கரைகளின் மீதும், இயன்றளவு மக்கள் பெரும்பான்மையினரைக் குடியேறச் செய்து, தெய்வீக ஆற்றுப் பெருக்கெடுக்கும்போது, அவரவர் தரத்திற்கேற்ப, திருவருள் துணையை அவர்கள் பெறச் செய்வதுதான்."

"அவதார் மெஹெர் பாபா என்னும் மின் நிலையத்துடன் நாம் எப்போதும் தொடர்பு கொண்டிருப்போமாக; அப்

போதுதான் அந்த மின் நிலையம் இயக்கம் பெறும்போது, அத்துடன் இணைவுடைய அனைத்தும் ஒளிபெற்றுத் திகழ்வதாக இருக்கும்."

வெவ்வேறு காலகட்டங்களில் பாபா அவர்கள் மொழிந்த அருளுரைகளில் குறிப்பிட்ட சில மட்டுமே இந்தச் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும், அவதார் மெஹெர் பாபா வழங்கிய தெய்வீகக் கருவூலத்திலிருந்து எடுக்கப்பட்ட கவின்மிகு நன்முத்துக் களாகும்.

*வி. சீதா ராமைய்யா*

## அவதார் மெஹெர் பாபாவின் பிறந்த நாள் நூற்றாண்டு விழா

அவதார் மெஹெர் பாபா பூனாவில் 25.2.1994–ல் பிறந்தார். அவருடைய பிறந்த நாள் நூற்றாண்டு விழா இந்தியா விலும் பிற நாடுகளிலும் 25.2.1994 முதல் கொண்டாடப்பட்டது.

# தெய்வீக நன்முத்துக்கள்

❤❤❤

1. கவலைப்படாதே — மகிழ்ச்சியாயிரு.

2. உண்மையான மகிழ்ச்சி என்பது மற்றவர்களை மகிழ்வுறச் செய்வதில்தான் உள்ளது.

3. உலக சுகபோகங்களைத் தேடாதிருந்தால், நீ ஆன்மீகப் பொக்கிஷத்தைக் காண்பாய்.

4. அனைவரிடமும் உள்ள ஆன்மாவே நிலைத்த இன்பத்தின் இருப்பிடம்; அவர்களுடைய சுயநலமோ தொடர்ந்து வரும் துயரத்திற்குக் காரணம் ஆகும்.

5. ...நீ செல்வந்தனாயிருக்கிறாயோ, வறியவனாயிருக்கிறாயோ, அல்லது நீ மகிழ்ச்சியுடனிருக்கிறாயோ, துயரத்திலிருக்கிறாயோ, எப்படி ஆயினும், நீ உள்ளதைக் கொண்டு திருப்தியடைவா

யாக. உன் நன்மைக்காகவே கடவுள் அவ்வாறு அமைத்துள்ளார் என்பதைப் புரிந்து கொண்டு, அவரிடம் உன்னை ஒப்படைத்து விடுவாயாக.

6. உண்மையான மகிழ்வுடன் இருப்பவர்கள் எவரெனில், எப்பொழுதும், அவர்களுக்குக் கிடைத்திருப்பதைக் குறித்து திருப்தி மனப்பான்மையுடன் உள்ளவர்களேயாவர்.

7. ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு பழகும் கலையை ஒருவன் எப்பொழுது கற்றுக் கொள்ளத் தொடங்குகிறானோ, அப்போது உண்மையான மகிழ்ச்சி உதயமாகிறது; புரிந்து பழகுதல் என்பது தன்னலம் மறந்து அன்பு பாராட்டுவதாகும்.

8. ...மன்னித்து விடும் பண்பு ஒரு சிறந்த அறமாகும்.

9. மனிதன் ஆகாய வெளியிலே மிக உயரப் பறந்தாலும், ஆழ்கடலின் அடிமட்டத்திற்குச் சென்றாலும், அவன்

எவ்வித மாறுதலுக்குட்படாமலேயே இருந்து வருவான். ஏனெனில், அவன் தன்னைத் தான் மறந்துவிடாமலும், மன்னித்துவிடும் அறப்பண்பைச் செயற்படுத்த நினைக்காமலும் இருந்துவிடுதலே காரணம் ஆகும்.

10. உன்னுடைய மனத்தை அமைதியாகவும், ஒரு சீராகவும், உறுதியாகவும் வைத்துக்கொள்; ஆசைகளுக்கு இடங்கொடாமல் மனத்தைக்கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொள்ள முயற்சி செய்வாயாக.

11. மனம் ஒரு கல்விக்களஞ்சியம்; இதயம் ஆன்மீக ஞானக் கருவூலம்.

12. மனக்கதவை மூடிவிட்டு, உன்னுடைய கவலைகளை முடிவுக்குக் கொண்டுவா; இதயக்கதவைத் திறந்து அன்பை வெளிப்படுத்து.

13. மிகக் கீழ்த்தரமான பாவிகளும் கூட, தங்களுடைய இதயத்தை அடி நிலையிலேயே முழுமையாக மாற்றிக் கொள்ளும்

துணிவும் நேர்மையும் கொண்டிருப்பார்களாயின், சிறந்த அருளாளர்களாக ஆக முடியும்.

14. விஞ்ஞானம், அதை உபயோகிக்கும் முறையைப் பொறுத்து, ஆன்மீகத்திற்கு உதவியாக அல்லது தடையாக உள்ளது.

15. விஞ்ஞானமும், மதமும் ஒன்றை ஒன்று சார்ந்து செயற்படும்போதுதான் அனைத்துத் துறைகளிலும் மனித இனம் முன்னேற்றம் காண இயலும்.

16. என் நோக்கில், அனைத்து மதங்களும் சிறந்தனவே; ஆனால் அவை அனைத்தையும் விட **'கடவுள்'** சிறந்தவர்.

17. ...ஒவ்வொரு மதமும், எல்லையில்லா புனித அன்பும், ஆனந்தமுமான சமுத்திரத்தை அடைய சமத்துவமான வழிகாட்டியாகும்.

18. எல்லா மதங்களும் கடவுளின் அருள் வெளிப்பாட்டிற்காக ஏற்பட்ட சாதனங்களாகும்.

19. நீ சார்ந்துள்ள மதம் காட்டுகிற நன்னெறி வழி செல்வாயானால், அதுவே உனக்கு வீடு பேறு அளிக்கவல்லது; ஒருவனுடைய சொந்த மதத்திலிருந்து வேறு மதத்திற்கு மாறுவது தவறான செயலாகும்.

20. நீ, உன்னுடைய மதத்தை விட்டு விட வேண்டியதில்லை; ஆனால் மேல் தோல் போன்ற சடங்குகளையும் ஆச்சாரங்களையும் மட்டும் உதறித்தள்ளி விடவும்.

21. உண்மை என்பது, இப்போது நிலவி வரும் மதங்களுடன் தொடர்புடையது அல்ல; அது, அந்த மதங்களின் வரையறுக்கப்பட்ட ஆணைகளுக்கும் வெற்றுக் கொள்கைகளுக்கும் அப்பாற்பட்டதாகும்.

22. கடவுள் எப்பொழுதும் உள்ளவர்; ஆகவே, கடவுளை நாடிக் கண்டுணரத் தக்கவர்.

23. கடவுளை, உனக்கு வெளியில் தேடாதே; உன் இதயமே அவருடைய

இருப்பிடமாதலால், அவரை உன்னுள்ளத்தில்தான் கண்டு கொள்ள முடியும்.

24. ஆகவே வெளியிலோ இமயமலைக் குகைகளிலோ கடவுளைக் காண இயலாது; ஒவ்வொருவரின் இதயக்குகையில் கடவுள் இருக்கிறார்; உன் இதயத்தைப் புனிதப் படுத்து; கடவுள் அதில் ஒளிபரப்பி விளங்குவார்.

25. கடவுள், பேச்சு மொழிக்கு செவி சாய்ப்பதில்லை—

கடவுள் மனத்தின் மொழிக்கும் செவி சாய்ப்பதில்லை—

ஆனால் கடவுள், இதயத்தின் அன்பு மொழிக்கு மட்டுமே செவிசாய்க்கிறார்.

26. "கடவுளைத்தவிர மற்றது எதுவும் உண்மையல்ல; கடவுளிடம் செலுத்தப் படும் தூய அன்பு ஒன்றுதான் உண்மையானது." இந்த மொழிகள் உன் இதயத்திலே பொறித்து வைக்கப்படட்டும்.

27. கடின உழைப்பினால் வாழ்க்கைத் தேவைகளை நீ அடைய முடியும்; அதே போன்று, உன்னுடைய இதயக் கனிவினால் கடவுள் தன்மையை அடைய முடியும்.

28. இதயக்கோயிலில் நுழைந்து அங்குள்ள கடவுளை எவர் காண முடியவில்லையோ, அவர்தான் உண்மையில் தீண்டப்படாதவர் ஆவார்.

29. கடவுள் எங்கும் இருக்கிறார்; எதிலும் இருக்கிறார்; பெரும்பாலும், அவர் உன்னுள்ளேயே நிறைந்து இருக்கிறார்.

30. கடவுள் எங்கும் நிறைந்தவர்; அவரை எவனொருவன் இதயபூர்வமாக அழைக்கிறானோ, அவனுடைய குரலுக்கு அவர் செவிசாய்த்து உதவிபுரிகிறார்.

31. கடவுள், உன்னுடைய நிழலைவிட, உனக்கு மிக அண்மையில் இருக்கிறார்.

32. கடவுளை முழுமையாக நம்புவா யாக; உன் துயரங்கள் அனைத்தையும் அவர் தீர்த்து வைக்கிறார்; மனமார அவ ரிடம் அனைத்தையும் ஒப்படைத்துவிடு அவற்றை அவர் தக்கவாறு கவனித்துக் கொள்வார்.

33. கடவுளே உண்மைப் பொருள் மற்ற அனைத்தும் மாயை (பொய்த் தோற்றம்).

34. கடவுள் ஒருவரே உண்மையானவர் அவரே அன்பு, அழகு, அமைதி, ஆனந் தம் ஆகியவற்றின் தோற்றுவாய் ஆகும்.

35. உன்னை நீ உன் நினைவிலிருந்து அகற்றும்போது, கடவுளை உணர்கிறாய்.

36.கடவுள் வழிபாடு இதயபூர்வமான தாக இல்லையெனில், அத்தகைய வழி பாடு செய்யாமலிருப்பதே நல்லது.

37. கடவுள், உன்னுடைய பேனா வை யும் எழுத்துக்களைப் படிப்பதில்லை.

அவர் உன்னுடைய இதயம் ஒலிக்கும் இசையைக் கேட்கவே விரும்புகிறார்.

38. இதய எழுச்சியாலமையும் இதயத்தின் வேண்டுகோளைத்தான் கடவுள் கேட்க விரும்புகிறார்; இதயம் படும் துயரத்தைத் துடைக்கவே அவர் தன் கவனத்தைத் திருப்புகிறார்...

39. ஒரு தேசத்தின் தலைவன், கடவுளிடம் பரிபூரண நம்பிக்கை வைக்கையில், கடவுள் அவனை அந்தத் தேசத்தை சரியான பாதையில் நடத்திச் செல்லும் கருவியாக ஆக்குகிறார்.

40. கடவுளிடம் அன்பு செலுத்துவதாகக் காட்டிக் கொண்டு, அவரிடமும் இவ்வுலகத்திடமும், தனக்குத் தானும் நேர்மையற்றவனாக நடந்து கொள்வது என்பது ஈடு இணையற்ற கபட நாடகமாகும்.

41. கடவுள் கபட நாடகத்தைத்தவிர மற்றெல்லாவற்றையும் மன்னிக்கிறார்.

42. எவனொருவன் தனக்காக மட்டும் வாழ்கிறானோ, அவன் உண்மையிலேயே செத்தவனாகிறான்; ஆனால் கடவுளுக்காக மடிபவர்களே உண்மையாக வாழ்பவராகிறார்கள்.

43. தன்னுடைய நாட்டின் நலனிற்காக உயிரைத் தியாகம் செய்பவன் சிறந்தவனாகிறான்; ஆனால், கடவுள் பணியில் இறப்பவன் அவனை விடச் சிறந்தவன்.

44. இரை தேடும் மனம் படைத்த மக்களுக்கு ஆவன செய்துவிட்டோம்; இனி அவர்களை இறை தேடும் மனம் படைத்தவர்களாக ஆக்கிடுவோம்.

45. மானிட சரீரம், உடலெடுத்த பிறவிகள் அனைத்திலும் சிறந்ததாகும்; இம்மானிட தேகத்தில் இருந்து கொண்டுதான் கடவுளை உணர முடியும்; அவ்வாறு கடவுளை உணரும்வரை, பிறப்பு, இறப்பு ஆகியவை தொடர்ந்து கொண்டே இருக்கும்.

46. உள்ளார்ந்து கடவுளை உணர்ந்து கொள்வதுதான் நம் வாழ்வின் பயனாகும், உலகில் கடமைகளை ஆற்றிவரும் போதே இதனை நாம் செய்ய முடியும்; வாழ்வின் ஒவ்வொரு துறையிலும், முனைப்பான செயல்களுக்கிடையிலேயும், பற்றற்ற மனப்பான்மையுடன் நம் செயல்களை நம் பேரன்பிற்குரிய கடவுளிடம் அர்ப்பணித்தல் வேண்டும்.

47. கடவுளிடம் பணமோ, புகழோ, அதிகாரமோ, உடல்நலமோ, குழந்தைகளோ வேண்டுமென்று கேட்காதே; மாறாக, அவருடைய திருவருளை நாடுவாயாக; அது நிலைத்த பேரின்பத்திற்கு வழி காட்டும்.

48. நமது சக மக்களிடம் அன்பு காட்டுவதே கடவுளைத் தூய அன்புடன் நேசிப்பதற்கு நடைமுறைக்குகந்த மார்க்கமாகும்.

49. அமைவுற்ற மதங்களோ, மதங்களின் உட்பிரிவுகளோ இன்று மனித இனத்திற்கு உடனடியான தேவைப்பாடு அல்ல; **அன்பு** ஒன்றே தேவையானது.

50. கடவுளிடம் அன்பு பாராட்டுவதே வாழ்வின் குறிக்கோள் ஆகும்; கடவுளுடன் ஒன்றிணைவதே வாழ்வின் முடிவெல்லையாகும்.

51. கடவுளின்மீது அன்பு தோன்றும் போது, அவரிடம் நாம் கொண்டுள்ள பயம் மறைகிறது.

52. நீ யாரிடம் அன்பு செலுத்த முடியாதோ, அவரிடம் அன்பு காட்டுவதன் மூலம், கடவுளை அன்புடன் நேசிக்கத் துவங்கு.

53. அன்பே கடவுள்; காம இச்சை சைத்தானுடையது.

54. நேர்மை வாழ்வு தெய்வீகத்திற்குத் திறவுகோல்; எவனொருவன், கடவுளிடம் நேர்மையாக அன்பு செலுத்துகிறானோ,

அவன், தன்னைக் கடவுளிடம் இழந்து, தன்னைக் கடவுளாகவேக் காண்கிறான்.

55. சாதாரண மனிதன், பிறருக்கு அன்புடன் உதவி புரிவதன் மூலம், நடைமுறையில் கடவுளிடம் அவன் உண்மை அன்பு செலுத்துகிறான்.

56. நம் அனைவரிடமும் சம நிலையில் உறைந்து விளங்கும் கடவுள் ஒருவரே; அவரை நாம் ஒவ்வொருவரும் அன்பு ஒன்றாலேயே அணுக முடியும்.

57. கடவுளை அன்பு ஒன்றினால் உணர முடியுமே தவிர, சித்திகளை நாடும் ஆய்வறிவினால் முடியாது.

58. அன்பை விட பெருமைமிகு சாதனம் எதுவுமில்லை; அன்பை விட உயரிய சட்டமும் இல்லை; அன்பினைத் தவிர நாம் அடையும் குறிக்கோள் ஒன்று இல்லை; ஏனெனில், தெய்வீக நிலையில் அன்பு வரம்பற்றது; கடவுளும், அன்பும் ஒன்றே என்க, தெய்வீக அன்புடையோர் கடவுளைத் தன்னகத்தேக் கொண்டவராவர்.

59. பத்து லட்சம் மக்களில் ஒருவரே கடவுளிடம் அன்பு செலுத்துகிறார். அவ்வாறு அன்பு செலுத்தும் பத்து லட்சம் மக்களில் ஒருவரே பேரன்புடைய கடவுளின் அடி பணிந்து, முடிவில் அவரிடம் தன்னை முழுமையாக ஒப்படைக்கிறார்.

60. தூய அன்பு தன்னிகரற்ற விழுப்பங் கொண்டது; ஆற்றலில் அதற்கு இணையானது எதுவுமில்லை; அது எத்தகைய இருளையும் நீக்கவல்லது.

61. சத்குருநாதருடைய அருள் வீழ்ச்சியின் காரணமாகவே, சாதகனின் இதயத்தில் தூய அன்பு ஆர்த்தெழுகிறது.

62. எவரொருவரும், தாம் கொண்டுள்ள சமயச் சடங்கினாலோ, சமய வினைமுறையினாலோ, புற ஆச்சாரங்களினாலோ, வழிபாட்டினாலோ, தியானத்தினாலோ, தவத்தினாலோ, நினைவாற்றலினாலோ தங்களுக்குள் அவ்வன்பினைத் தோற்றுவித்துக் கொள்ள இயலாது.

63. மனித இனம் புத்தெழுச்சி பெற வேண்டுமாயின், புதியதோர் அன்பு, அதாவது களங்கமற்றதாய் தனித்த அல்லது கூட்டுருவான பேராசைகளிலிருந்து விடுபட்ட தூய அன்பு மலர்ந்து, மனித இதயக் கதவு திறக்கப்பட வேண்டும்.

64. ஒரு புறம், சமய வழிபாட்டு மரபோ, சமயஞ்சார்ந்த புற ஆச்சாரங்களோ, சமயப் போதனைகள் அல்லது பேருரைகளோ, மறுபுறம், உலகியல் வாழ் நலத்தை அல்லது உடல் சார்ந்த இன்ப நலத்தை நாடிப் பெற முயலுதலோ உண்மையான மகிழ்ச்சியை அளிக்காது என்பதையும், தன்னலமற்ற அன்பும் உலகந்தழுவிய சகோதரத்தத்துவமுமே உண்மை மகிழ்ச்சியை அளிக்க வல்லது என்பதையும் உலகம் விரைவில் உணர்ந்து கொள்ளும்.

65. அன்பைத் தவிர மற்ற அனைத்தும் தோல்வியுறக் கூடியவை.

66. ஆன்மீகம் என்பது மனிதனை மேலும் மனிதாபிமான முள்ளவனாக ஆக்குவதாயிருத்தல் வேண்டும்.

67. ஆன்மீகம் என்பது உயிர்வாழ் நிலையைப் போதிய அளவுக்கு முழுமையாக சந்திக்க வல்லதாய், அதே நேரத்தில், எதிரிடைத் தன்மைகளால் தாக்குறப்படாமலிருப்பதாயிருத்தல் வேண்டும்.

68. உண்மையின் பாதை ரோஜா மலர்ப்படுக்கை அல்ல.

69. வாழ்க்கை என்பது, உலகியல் நடைமுறையைப் பொறுத்தவரை எளிதானதெனவும், ஆன்மீக வளர்ச்சியைப் பொறுத்தவரை முக்கியத்துவம் வாய்ந்தது எனவும் கருத்தில் கொண்டு முனைப்புடன் செயலாற்றுவாயாக.

70. கவர்ச்சிகளூட்டும் உடல் இன்பத்தில் ஒரு கண்ணும், நிலைத்த பேரின்ப ஒளி காணும் நாட்டத்தில் மறு கண்ணும் கொள்வது என்பது, நடைமுறைக்கு


எவ்விதத்திலும் ஒத்து வராது என்பதுடன், அது உச்ச நிலை கண்ட கபட நாடகம் என்பதையும் அறிதல் வேண்டும்.

71. இந்திய நாடு அரசியல் ஏற்புரிமை பெற்றுவிட்டது; நாம் இப்போது ஆன்மீக உரிமை பெற முயல்வோமாக – அதைத் தவிர எந்தவித உரிமையும் கட்டுப்பாடே ஆகும்.

72. இந்தியா ஓர் ஆன்மீக நாடு; ஏனெனில், அது பல ஆண்டுகளாகவே அருளாளர்களையும், ஆன்மீகக் குருமார் களையும் கொண்டதொரு நாடாக இருப்ப தால், உலகில் அது நல்வாய்ப்பும் தனித் தன்மையும் கொண்டதாயுள்ளது.

73. ஆன்மீக சாதகர்கள் முன் கூட்டியே வைகறையில் துயிலெழ வேண்டும்; அவ் வாறு செய்யாமல், தாமதித்துத் துயி லெழுந்தால், உனக்கும், உலகியல் வாழ்வை நாடும் மனங்கொண்டவர்களுக் கும் அதிக வேறுபாடு இல்லை.

# தெய்வீக நன்முத்துக்கள்




அவதார்
மெஹெர் பாபா

*Tamil Series No: 2*

# DEIVEEKA NALMUTHUGAL

Messages dictated by
**AVATAR MEHER BABA**

*Compiled by: V. Sita Ramayya*

*Tamil Translation by: K. Gopalan*

*Edited by: T. Siva Chidambaram*

Words of Meher Baba are Copyright © 1997,
Avatar Meher Baba P. P. C. Trust, Ahmednagar

Tamil Version Copyright © 1997,
Avatar Meher Baba Tamilnadu Centre, Madras

*Published by:*
**Avatar Meher Baba Tamilnadu Centre**
36, East Mada Street,
Tiruvanmiyur,
Madras - 600 041

# தெய்வீக நன்முத்துக்கள்

## அவதார் மெஹெர் பாபா வழங்கிய அருளுரைகள்

தொகுத்தவர்
**வி.சீதா ராமைய்யா**

மொழி பெயர்த்தவர்
**கே.கோபாலன்**

சீரமைத்தவர்
**த. சிவசிதம்பரம்**

**அவதார் மெஹெர் பாபா**
**தமிழ்நாடு மையம்,**
சென்னை, இந்தியா.

# முகவுரை
# (Preface)

மனித இனத்தை விழிப்புறச் செய்வதற்கெனவே, சுமார் 700லிருந்து 1400 ஆண்டுகளுக்கு ஒரு முறை இவ்வுலகின் வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு பெயர்களில், கடவுள் மனிதனாகப் பிறக்கிறார். இதுகாறும் சொராஸ்டிரராக, ஸ்ரீராமனாக, ஸ்ரீகிருஷ்ணனாக, புத்தபிரானாக, ஏசு கிருத்துவாக, முகமது நபியாக அவர் அவதரித்திருக்கிறார்.

சுவாமி விவேகானந்தா அவர்கள், 19.9.1893 அன்று சிக்காக்கோ நகரில் கூடிய உலக மதங்களின் பேரவையில் உரையாற்றும் போது சொன்னதாவது:

"கீழைவானத்தில் ஒரு விண்மீன் தோன்றியது; அது மேற்கு நோக்கி ஒரு சீராக நகர்ந்து, உலகத்தை ஒரு முறை சுற்றிவரும் வரை சில நேரங்களில் ஒளி மங்கியும், பிற நேரங்களில் ஒளி மிகுந்தும்.

காணப்பட்டது. அது, மீண்டும் கீழைத் தொடுவானத்தில், சான்போ எல்லையில், இதற்குமுன் எப்போதும் கண்டிராத அளவில், ஆறரை மடங்குப் பேரொளியுடன் எழுந்துள்ளது; மனித உருவில் கடவுள் பிறக்கப்போகும் நிகழ்ச்சியை அந்த விண்மீன் எழுச்சி எடுத்துக் காட்டுவதாயுள்ளது.

சுவாமி விவேகானந்தர் அவர்கள் அவ்வாறு வருமுன் உரைத்ததற்கேற்ப, முழுமுதற் கடவுளானவர் பேரருள் கொண்டவராய், 25.2.1894 அன்று மெஹெர் பாபாவின் உருவில் இந்நிலவுலகில் அவதாரம் செய்தார்.

சுழன்றுவரும் கால வட்டத்தில், மெஹெர் பாபா அவர்கள் முகமது நபி நாயகத்திற்குப் பின்னர் அவதார நிறைவாக விளங்குகிறார்கள்.

அவதார் மெஹெர் பாபா அவர்கள் 10.7.1925லிருந்து, அவர் மறைந்த நாளான

31.1.1969 வரை மௌன நிலையில் இருந்தார்கள். அவ்வாறு 44 ஆண்டுகள் மௌனமாயிருந்தாலும், மனித சமுதாயத்தின் நலன் கருதி, அனேக அருளுரைகளை வழங்கி வந்தார்கள். அவை அனைத்தும், எழுத்துப் பலகையில் காட்டுவதன் மூலமும், தமக்கேயுரிய முகக்குறிப்புகளாலும், கைச்சைகைகளாலும் இவ்வுலகுக்கு வெளிப்படுத்தி அருளப்பட்டன.

மெஹெர்பாபா அவர்கள், இவ்வுலகில் தம் அவதாரத்திருப்பணியை ஆற்றி வருகையில், புதிய சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் வகையில், மனித இன மேம்பாட்டுக்காக, தம் உள்ளுணர்வு ஆதரத்தளங்களிலிருந்து கொண்டு தம் பணியினை இயக்கி வந்தார்கள். மனித இதயத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி, அதன் வாயிலாக உலகந்தழுவிய சகோதரத்துவத்தையும் அமைதியையும் மனித சமுதாயத்தில் மலர்விக்கும் ஒரு

பொற்காலத்தை உருவாக்கி, மக்கள் நல்வாழ்வை பெற்றுய்வதற்காக தெய்வீக வழிகாட்டியென விளங்கினார்கள். பிறப்பு இறப்பு என்னும் முடிவற்ற இந்தச் சூறாவளியிலிருந்து நம்மை நாமே விடுவித்துக் கொள்ள அவர்கள் நன்னெறி காட்டித் திகழ்ந்தார்கள்.

மெஹெர் பாபா கூறியது :

"மெஹெராபாத்தில் நான் ஆற்றவுள்ள பணியாவது, ஆன்மீகக் கால்வாய்களை உருவாக்கி, அவற்றின் இருமருங்குக் கரைகளின் மீதும், இயன்றளவு மக்கள் பெரும்பான்மையினரைக் குடியேறச் செய்து, தெய்வீக ஆற்றுப் பெருக்கெடுக்கும்போது, அவரவர் தரத்திற்கேற்ப, திருவருள் துணையை அவர்கள் பெறச் செய்வதுதான்."

"அவதார் மெஹெர் பாபா என்னும் மின் நிலையத்துடன் நாம் எப்போதும் தொடர்பு கொண்டிருப்போமாக; அப்

போதுதான் அந்த மின் நிலையம் இயக்கம் பெறும்போது, அத்துடன் இணைவுடைய அனைத்தும் ஒளிபெற்றுத் திகழ்வதாக இருக்கும்."

வெவ்வேறு காலகட்டங்களில் பாபா அவர்கள் மொழிந்த அருளுரைகளில் குறிப்பிட்ட சில மட்டுமே இந்தச் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும், அவதார் மெஹெர் பாபா வழங்கிய தெய்வீகக் கருவூலத்திலிருந்து எடுக்கப்பட்ட கவின்மிகு நன்முத்துக்களாகும்.

*வி. சீதா ராமைய்யா*

## அவதார் மெஹெர் பாபாவின் பிறந்த நாள் நூற்றாண்டு விழா

அவதார் மெஹெர் பாபா பூனாவில் 25.2.1994-ல் பிறந்தார். அவருடைய பிறந்த நாள் நூற்றாண்டு விழா இந்தியாவிலும் பிற நாடுகளிலும் 25.2.1994 முதல் கொண்டாடப்பட்டது.

# தெய்வீக நன்முத்துக்கள்

❤❤❤

1. கவலைப்படாதே – மகிழ்ச்சியாயிரு.

2. உண்மையான மகிழ்ச்சி என்பது மற்றவர்களை மகிழ்வுறச் செய்வதில்தான் உள்ளது.

3. உலக சுகபோகங்களைத் தேடாதிருந்தால், நீ ஆன்மீகப் பொக்கிஷத்தைக் காண்பாய்.

4. அனைவரிடமும் உள்ள ஆன்மாவே நிலைத்த இன்பத்தின் இருப்பிடம்; அவர்களுடைய சுயநலமோ தொடர்ந்து வரும் துயரத்திற்குக் காரணம் ஆகும்.

5. ...நீ செல்வந்தனாயிருக்கிறாயோ, வறியவனாயிருக்கிறாயோ, அல்லது நீ மகிழ்ச்சியுடனிருக்கிறாயோ, துயரத்திலிருக்கிறாயோ, எப்படி ஆயினும், நீ உள்ளதைக் கொண்டு திருப்தியடைவா

யாக. உன் நன்மைக்காகவே கடவுள் அவ்வாறு அமைத்துள்ளார் என்பதைப் புரிந்து கொண்டு, அவரிடம் உன்னை ஒப்படைத்து விடுவாயாக.

6. உண்மையான மகிழ்வுடன் இருப்பவர்கள் எவரெனில், எப்பொழுதும், அவர்களுக்குக் கிடைத்திருப்பதைக் குறித்து திருப்தி மனப்பான்மையுடன் உள்ளவர்களேயாவர்.

7. ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு பழகும் கலையை ஒருவன் எப்பொழுது கற்றுக் கொள்ளத் தொடங்குகிறானோ, அப்போது உண்மையான மகிழ்ச்சி உதயமாகிறது; புரிந்து பழகுதல் என்பது தன்னலம் மறந்து அன்பு பாராட்டுவதாகும்.

8. ...மன்னித்து விடும் பண்பு ஒரு சிறந்த அறமாகும்.

9. மனிதன் ஆகாய வெளியிலே மிக உயரப் பறந்தாலும், ஆழ்கடலின் அடிமட்டத்திற்குச் சென்றாலும், அவன்

எவ்வித மாறுதலுக்குட்படாமலேயே இருந்து வருவான். ஏனெனில், அவன் தன்னைத் தான் மறந்துவிடாமலும், மன்னித்துவிடும் அறப்பண்பைச் செயற்படுத்த நினைக்காமலும் இருந்துவிடுதலே காரணம் ஆகும்.

10. உன்னுடைய மனத்தை அமைதியாகவும், ஒரு சீராகவும், உறுதியாகவும் வைத்துக்கொள்; ஆசைகளுக்கு இடங்கொடாமல் மனத்தைக்கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொள்ள முயற்சி செய்வாயாக.

11. மனம் ஒரு கல்விக்களஞ்சியம்; இதயம் ஆன்மீக ஞானக் கருவூலம்.

12. மனக்கதவை மூடிவிட்டு, உன்னுடைய கவலைகளை முடிவுக்குக் கொண்டுவா; இதயக்கதவைத் திறந்து அன்பை வெளிப்படுத்து.

13. மிகக் கீழ்த்தரமான பாவிகளும் கூட, தங்களுடைய இதயத்தை அடி நிலையிலேயே முழுமையாக மாற்றிக் கொள்ளும்

துணிவும் நேர்மையும் கொண்டிருப்பார்களாயின், சிறந்த அருளாளர்களாக ஆக முடியும்.

14. விஞ்ஞானம், அதை உபயோகிக்கும் முறையைப் பொறுத்து, ஆன்மீகத்திற்கு உதவியாக அல்லது தடையாக உள்ளது.

15. விஞ்ஞானமும், மதமும் ஒன்றை ஒன்று சார்ந்து செயற்படும்போதுதான் அனைத்துத் துறைகளிலும் மனித இனம் முன்னேற்றம் காண இயலும்.

16. என் நோக்கில், அனைத்து மதங்களும் சிறந்தனவே; ஆனால் அவை அனைத்தையும் விட **'கடவுள்'** சிறந்தவர்.

17. ...ஒவ்வொரு மதமும், எல்லையில்லா புனித அன்பும், ஆனந்தமுமான சமுத்திரத்தை அடைய சமத்துவமான வழிகாட்டியாகும்.

18. எல்லா மதங்களும் கடவுளின அருள் வெளிப்பாட்டிற்காக ஏற்பட்ட சாதனங்களாகும்.

19. நீ சார்ந்துள்ள மதம் காட்டுகிற நன்னெறி வழி செல்வாயானால், அதுவே உனக்கு வீடு பேறு அளிக்கவல்லது; ஒருவனுடைய சொந்த மதத்திலிருந்து வேறு மதத்திற்கு மாறுவது தவறான செயலாகும்.

20. நீ, உன்னுடைய மதத்தை விட்டு விட வேண்டியதில்லை; ஆனால் மேல் தோல் போன்ற சடங்குகளையும் ஆச்சாரங்களையும் மட்டும் உதறித்தள்ளி விடவும்.

21. உண்மை என்பது, இப்போது நிலவி வரும் மதங்களுடன் தொடர்புடையது அல்ல; அது, அந்த மதங்களின் வரையறுக்கப்பட்ட ஆணைகளுக்கும் வெற்றுக் கொள்கைகளுக்கும் அப்பாற்பட்டதாகும்.

22. கடவுள் எப்பொழுதும் உள்ளவர்; ஆகவே, கடவுளை நாடிக் கண்டுணரத் தக்கவர்.

23. கடவுளை, உனக்கு வெளியில் தேடாதே; உன் இதயமே அவருடைய

இருப்பிடமாதலால், அவரை உன்னுள்ளத்தில்தான் கண்டு கொள்ள முடியும்.

24. ஆகவே வெளியிலோ இமயமலைக் குகைளிலோ கடவுளைக் காண இயலாது; ஒவ்வொருவரின் இதயக்குகையில் கடவுள் இருக்கிறார்; உன் இதயத்தைப் புனிதப் படுத்து; கடவுள் அதில் ஒளிபரப்பி விளங்குவார்.

25. கடவுள், பேச்சு மொழிக்கு செவி சாய்ப்பதில்லை–

கடவுள் மனத்தின் மொழிக்கும் செவி சாய்ப்பதில்லை–

ஆனால் கடவுள், இதயத்தின் அன்பு மொழிக்கு மட்டுமே செவிசாய்க்கிறார்.

26. "கடவுளைத்தவிர மற்றது எதுவும் உண்மையல்ல; கடவுளிடம் செலுத்தப் படும் தூய அன்பு ஒன்றுதான் உண்மையானது." இந்த மொழிகள் உன் இதயத்திலே பொறித்து வைக்கப்பட்டும்.

27. கடின உழைப்பினால் வாழ்க்கைத் தேவைகளை நீ அடைய முடியும்; அதே போன்று, உன்னுடைய இதயக் கனிவினால் கடவுள் தன்மையை அடைய முடியும்.

28. இதயக்கோயிலில் நுழைந்து அங்குள்ள கடவுளை எவர் காண முடியவில்லையோ, அவர்தான் உண்மையில் தீண்டப்படாதவர் ஆவார்.

29. கடவுள் எங்கும் இருக்கிறார்; எதிலும் இருக்கிறார்; பெரும்பாலும், அவர் உன்னுள்ளேயே நிறைந்து இருக்கிறார்.

30. கடவுள் எங்கும் நிறைந்தவர்; அவரை எவனொருவன் இதயபூர்வமாக அழைக்கிறானோ, அவனுடைய குரலுக்கு அவர் செவிசாய்த்து உதவிபுரிகிறார்.

31. கடவுள், உன்னுடைய நிழலைவிட, உனக்கு மிக அண்மையில் இருக்கிறார்.

32. கடவுளை முழுமையாக நம்புவாயாக; உன் துயரங்கள் அனைத்தையும் அவர் தீர்த்து வைக்கிறார்; மனமார அவரிடம் அனைத்தையும் ஒப்படைத்துவிடு. அவற்றை அவர் தக்கவாறு கவனித்துக் கொள்வார்.

33. கடவுளே உண்மைப் பொருள். மற்ற அனைத்தும் மாயை (பொய்த் தோற்றம்).

34. கடவுள் ஒருவரே உண்மையானவர். அவரே அன்பு, அழகு, அமைதி, ஆனந்தம் ஆகியவற்றின் தோற்றுவாய் ஆகும்.

35. உன்னை நீ உன் நினைவிலிருந்து அகற்றும்போது, கடவுளை உணர்கிறாய்.

36.கடவுள் வழிபாடு இதயபூர்வமானதாக இல்லையெனில், அத்தகைய வழிபாடு செய்யாமலிருப்பதே நல்லது.

37. கடவுள், உன்னுடைய பேனாவையும் எழுத்துக்களைப் படிப்பதில்லை.

அவர் உன்னுடைய இதயம் ஒலிக்கும் இசையைக் கேட்கவே விரும்புகிறார்.

38. இதய எழுச்சியாலமையும் இதயத்தின் வேண்டுகோளைத்தான் கடவுள் கேட்க விரும்புகிறார்; இதயம் படும் துயரத்தைத் துடைக்கவே அவர் தன் கவனத்தைத் திருப்புகிறார்...

39. ஒரு தேசத்தின் தலைவன், கடவுளிடம் பரிபூரண நம்பிக்கை வைக்கையில், கடவுள் அவனை அந்தத் தேசத்தை சரியான பாதையில் நடத்திச் செல்லும் கருவியாக ஆக்குகிறார்.

40. கடவுளிடம் அன்பு செலுத்துவதாகக் காட்டிக் கொண்டு, அவரிடமும் இவ்வுலகத்திடமும், தனக்குத் தானும் நேர்மையற்றவனாக நடந்து கொள்வது என்பது ஈடு இணையற்ற கபட நாடகமாகும்.

41. கடவுள் கபட நாடகத்தைத்தவிர மற்றெல்லாவற்றையும் மன்னிக்கிறார்.

42. எவனொருவன் தனக்காக மட்டும் வாழ்கிறானோ, அவன் உண்மையிலேயே செத்தவனாகிறான்; ஆனால் கடவுளுக்காக மடிபவர்களே உண்மையாக வாழ்பவராகிறார்கள்.

43. தன்னுடைய நாட்டின் நலனிற்காக உயிரைத் தியாகம் செய்பவன் சிறந்தவனாகிறான்; ஆனால், கடவுள் பணியில் இறப்பவன் அவனை விடச் சிறந்தவன்.

44. இரை தேடும் மனம் படைத்த மக்களுக்கு ஆவன செய்துவிட்டோம்; இனி அவர்களை இறை தேடும் மனம் படைத்தவர்களாக ஆக்கிடுவோம்.

45. மானிட சரீரம், உடலெடுத்த பிறவிகள் அனைத்திலும் சிறந்ததாகும்; இம் மானிட தேகத்தில் இருந்து கொண்டுதான் கடவுளை உணர முடியும்; அவ்வாறு கடவுளை உணரும்வரை, பிறப்பு, இறப்பு ஆகியவை தொடர்ந்து கொண்டே இருக்கும்.

46. உள்ளார்ந்து கடவுளை உணர்ந்து கொள்வதுதான் நம் வாழ்வின் பயனாகும், உலகில் கடமைகளை ஆற்றிவரும் போதே இதனை நாம் செய்ய முடியும்; வாழ்வின் ஒவ்வொரு துறையிலும், முனைப்பான செயல்களுக்கிடையிலேயும், பற்றற்ற மனப்பான்மையுடன் நம் செயல்களை நம் பேரன்பிற்குரிய கடவுளிடம் அர்ப்பணித்தல் வேண்டும்.

47. கடவுளிடம் பணமோ, புகழோ, அதிகாரமோ, உடல்நலமோ, குழந்தைகளோ வேண்டுமென்று கேட்காதே; மாறாக, அவருடைய திருவருளை நாடுவாயாக; அது நிலைத்த பேரின்பத்திற்கு வழி காட்டும்.

48. நமது சக மக்களிடம் அன்பு காட்டுவதே கடவுளைத் தூய அன்புடன் நேசிப்பதற்கு நடைமுறைக்குகந்த மார்க்கமாகும்.

49. அமைவுற்ற மதங்களோ, மதங்களின் உட்பிரிவுகளோ இன்று மனித இனத்திற்கு உடனடியான தேவைப்பாடு அல்ல; **அன்பு** ஒன்றே தேவையானது.

50. கடவுளிடம் அன்பு பாராட்டுவதே வாழ்வின் குறிக்கோள் ஆகும்; கடவுளுடன் ஒன்றிணைவதே வாழ்வின் முடிவெல்லையாகும்.

51. கடவுளின்மீது அன்பு தோன்றும் போது, அவரிடம் நாம் கொண்டுள்ள பயம் மறைகிறது.

52. நீ யாரிடம் அன்பு செலுத்த முடியாதோ, அவரிடம் அன்பு காட்டுவதன் மூலம், கடவுளை அன்புடன் நேசிக்கத் துவங்கு.

53. அன்பே கடவுள்; காம இச்சை சைத்தானுடையது.

54. நேர்மை வாழ்வு தெய்வீகத்திற்குத் திறவுகோல்; எவனொருவன், கடவுளிடம் நேர்மையாக அன்பு செலுத்துகிறானோ,

அவன், தன்னைக் கடவுளிடம் இழந்து, தன்னைக் கடவுளாகவேக் காண்கிறான்.

55. சாதாரண மனிதன், பிறருக்கு அன்புடன் உதவி புரிவதன் மூலம், நடைமுறையில் கடவுளிடம் அவன் உண்மை அன்பு செலுத்துகிறான்.

56. நம் அனைவரிடமும் சம நிலையில் உறைந்து விளங்கும் கடவுள் ஒருவரே; அவரை நாம் ஒவ்வொருவரும் அன்பு ஒன்றாலேயே அணுக முடியும்.

57. கடவுளை அன்பு ஒன்றினால் உணர முடியுமே தவிர, சித்திகளை நாடும் ஆய்வறிவினால் முடியாது.

58. அன்பை விட பெருமைமிகு சாதனம் எதுவுமில்லை; அன்பை விட உயரிய சட்டமும் இல்லை; அன்பினைத் தவிர நாம் அடையும் குறிக்கோள் ஒன்று இல்லை; ஏனெனில், தெய்வீக நிலையில் அன்பு வரம்பற்றது; கடவுளும், அன்பும் ஒன்றே என்க, தெய்வீக அன்புடையோர் கடவுளைத் தன்னகத்தேக் கொண்டவராவர்.

59. பத்து லட்சம் மக்களில் ஒருவரே கடவுளிடம் அன்பு செலுத்துகிறார். அவ்வாறு அன்பு செலுத்தும் பத்து லட்சம் மக்களில் ஒருவரே பேரன்புடைய கடவுளின் அடி பணிந்து, முடிவில் அவரிடம் தன்னை முழுமையாக ஒப்படைக்கிறார்.

60. தூய அன்பு தன்னிகரற்ற விழுப்பங் கொண்டது; ஆற்றலில் அதற்கு இணையானது எதுவுமில்லை; அது எத்தகைய இருளையும் நீக்கவல்லது.

61. சத்குருநாதருடைய அருள் வீழ்ச்சியின் காரணமாகவே, சாதகனின் இதயத்தில் தூய அன்பு ஆர்த்தெழுகிறது.

62. எவரொருவரும், தாம் கொண்டுள்ள சமயச் சடங்கினாலோ, சமய வினைமுறையினாலோ, புற ஆச்சாரங்களினாலோ, வழிபாட்டினாலோ, தியானத்தினாலோ, தவத்தினாலோ, நினைவாற்றலினாலோ தங்களுக்குள் அவ்வன்பினைத் தோற்றுவித்துக் கொள்ள இயலாது.

63. மனித இனம் புத்தெழுச்சி பெற வேண்டுமாயின், புதியதோர் அன்பு, அதாவது களங்கமற்றதாய் தனித்த அல்லது கூட்டுருவான பேராசைகளிலிருந்து விடுபட்ட தூய அன்பு மலர்ந்து, மனித இதயக் கதவு திறக்கப்பட வேண்டும்.

64. ஒரு புறம், சமய வழிபாட்டு மரபோ, சமயஞ்சார்ந்த புற ஆச்சாரங்களோ, சமயப் போதனைகள் அல்லது பேருரைகளோ, மறுபுறம், உலகியல் வாழ்நலத்தை அல்லது உடல் சார்ந்த இன்ப நலத்தை நாடிப் பெற முயலுதலோ உண்மையான மகிழ்ச்சியை அளிக்காது என்பதையும், தன்னலமற்ற அன்பும் உலகந்தழுவிய சகோதரத்தத்துவமுமே உண்மை மகிழ்ச்சியை அளிக்க வல்லது என்பதையும் உலகம் விரைவில் உணர்ந்து கொள்ளும்.

65. அன்பைத் தவிர மற்ற அனைத்தும் தோல்வியுறக் கூடியவை.

66. ஆன்மீகம் என்பது மனிதனை மேலும் மனிதாபிமானமுள்ளவனாக ஆக்குவதாயிருத்தல் வேண்டும்.

67. ஆன்மீகம் என்பது உயிர்பொழ் நிலையைப் போதிய அளவுக்கு முழுமையாக சந்திக்க வல்லதாய், அதே நேரத்தில், எதிரிடைத் தன்மைகளால் தாக்குறப்படாமலிருப்பதாயிருத்தல் வேண்டும்.

68. உண்மையின் பாதை ரோஜா மலர்ப்படுக்கை அல்ல.

69. வாழ்க்கை என்பது, உலகியல் நடைமுறையைப் பொறுத்தவரை எளிதானதெனவும், ஆன்மீக வளர்ச்சியைப் பொறுத்தவரை முக்கியத்துவம் வாய்ந்தது எனவும் கருத்தில் கொண்டு முனைப்புடன் செயலாற்றுவாயாக.

70. கவர்ச்சிகளூட்டும் உடல் இன்பத்தில் ஒரு கண்ணும், நிலைத்த பேரின்ப ஒளி காணும் நாட்டத்தில் மறு கண்ணும் கொள்வது என்பது, நடைமுறைக்கு

எவ்விதத்திலும் ஒத்து வராது என்பதுடன், அது உச்ச நிலை கண்ட கபட நாடகம் என்பதையும் அறிதல் வேண்டும்.

71. இந்திய நாடு அரசியல் ஏற்புரிமை பெற்றுவிட்டது; நாம் இப்போது ஆன்மீக உரிமை பெற முயல்வோமாக – அதைத் தவிர எந்தவித உரிமையும் கட்டுப்பாடே ஆகும்.

72. இந்தியா ஓர் ஆன்மீக நாடு; ஏனெனில், அது பல ஆண்டுகளாகவே அருளாளர்களையும், ஆன்மீகக் குருமார் களையும் கொண்டதொரு நாடாக இருப்ப தால், உலகில் அது நல்வாய்ப்பும் தனித் தன்மையும் கொண்டதாயுள்ளது.

73. ஆன்மீக சாதகர்கள் முன் கூட்டியே வைகறையில் துயிலெழ வேண்டும்; அவ் வாறு செய்யாமல், தாமதித்துத் துயி லெழுந்தால், உனக்கும், உலகியல் வாழ்வை நாடும் மனங்கொண்டவர்களுக் கும் அதிக வேறுபாடு இல்லை.

74. உண்மை உறுதிப்பொருள்கள் கொடுபடுவதும், பெறப்படுவதும் மௌனத்திலேயே நிகழ்கின்றன.

75. நீ உலகத்தில் இரு; ஆனால் உலகத்துடையதாக இராதே.

76. உலகத்தைத் துறக்காதே; உனது கீழ்த்தரமான நிலையை அகற்றி விடு உனக்குள்ளாகவே தனிமையை நாடு; அதனை வெளியில் வேறெங்கும் நாடாதே.

77. உலகியல் பற்றுக்களில் எதனுடைய ஆதிக்கத்திற்கும் நீ ஆட்படாமலிருப்பாயானால், அத்தகைய பற்றற்ற நிலையில், உன்னால் உலகத்தை உன் வசமாக்கிக் கொள்ள இயலும்.

78. நீ நில உலகின் ஆட்சியைத் தேடி அலையாமல், வானுலக அருளாட்சியை நாடினால், அதனை நீ பெற இயலும்.

79. அளவிலடங்காத அகண்டபொக்கிஷம் உனக்குள்ளாகவே உள்ளது; ஓரே

ஒரு பிரச்சினையாகுமெனில், நீ அதனை உனக்கு வெளியில் உன்னுள் தேடாமல், தேடுகிறாய்.

80. கடவுளிடமிருந்து உன்னைப் பிரித்து வைப்பவை மூன்று – **காமம், குரோதம், கஞ்சன்** – அதாவது **சிற்றின்பவேட்கை, கோபம், பேராசை;** சிற்றின்பவேட்கையையும் பேராசையையும் அடக்கி நீ வெற்றி கொண்டாலும், கோபத்தை கட்டாள்கையில் கொண்டு வருவது மிகவும் கடினச் செயல் ஆகும். இந்த மூன்று எதிரிகளையும் நீ வென்றுவிட்டாயானால், அவற்றைக் கட்டுப்படுத்திய வாலியாக (துறவியாக) ஆகிறாய்.

81. பேராசை போருக்கு வழி வகுக்கிறது; போதுமென்ற மனப்பான்மை அமைதிக்கு வழி வகுக்கிறது.

82. மனிதனுக்கு இன்று ஏற்படக் கூடிய மிகப் பெருத்த அபாயம் அவனுக்குள்ளாகவே இருக்கிறது என்பதில்லாமல்

வேறு எந்தவித இயற்கைக் கோளாறு களாலும் அல்ல என்பதை உணர்தல் வேண்டும்.

83. மனித இனத்தின் பிரச்சினையைக் கேவலம் ஓர் உணவுப் பிரச்சினையாக மட்டுமே புரிந்து கொள்வது என்பது அம்மனித இனத்தை விலங்கு நிலைக்குக் கொண்டு வருவதாகும்.

84. துன்பங்கள் எல்லாம், நாம் அவற்றைச் சமாளித்து வெற்றி கண்டு, நம் பெருமையை வெளிப்படுத்த ஏற்பட்ட வாய்ப்பே ஆகும்.

85. நமக்கு கேடு நினைப்போர்க்கும் நாம் நல்லவையே நினைப்போமாக.

86. எதனையும் விரும்பாதவன் அனைத்தையும் பெறுகிறான்.

87. மனிதன் போர்ப்படைத் தொகுதி முழுமையையும் தனக்கு இணங்கச் செய்ய லாம்; ஆனால், அவன், தன்னுடைய கடுங் கோபத்தை அடக்கி வெற்றி கொள்ள முடியாது.

88. மனித வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் வெளிப்படையாகவோ மறைவாகவோ எழுகிற போட்டித் தன்மை, மோதல், எதிர்ப்பு இவற்றைத் துடைத் தழிக்கவல்ல வழிவகைகளை வகுத்துக் கொள்வதே இப்போதுள்ள மனித இனத் தின் உடனடிப் பிரச்சினை ஆகும்.

89. இறந்தவரை உயிர்த்தெழச் செய்வது சித்தியல்ல; உயிருள்ளபோதே ஆணவத்தை அழித்து வாழ்வதே சித்தியாகும்; உலகமாகிய மாமாயையில், சித்திகள் எல் லாம் சின்னஞ்சிறிய மாயைகளேயாகும்.

90. நான், தற்போதைய உலகத்தை மீட்பதற்காகவேத் தோன்றிய தொன்மை யான முதல்வன்.

91. நான் மனித உருவில் வந்த கடவுள் என்பதை அனைவரும் புரிந்து கொள்ளும் தருணம் இதுவே.

92. நான் எந்த மதத்தையும் சார்ந்த வனல்ல; அன்பே என் மதம்; ஒவ்வொரு இதயமும் என் ஆலயம்.

93. உனக்கு எழுச்சியூட்ட வந்தேனே அன்றி, அறிவுறுத்த வரவில்லை.

94. என்னை உனக்குற்றத் தோழனாக ஆக்கிக்கொள்வாயாக.

95. நீ விரும்புவதை அல்லது நீ விரும்புகிறவாறு நான் கொடுக்க வரவில்லை; உன்னிடமிருந்து எடுத்துக் கொள்ளவே வந்துள்ளேன்.

96. உனக்குற்ற இடர்ப்பாட்டிலிருந்து உன்னை விடுவித்துக் கொள்ள என்னை நாடாதே; இதய பூர்வமாக உன்னை என்னிடம் ஒப்படைப்பதில் என்னைக் கண்டு கொள்வாயாக.

97. உனக்கு நேர்ந்தவை நெடிதுகால துன்பமாயினும், சிறிது நேர துயரமாயினும் அவை அனைத்தும் இறுதியில் உனக்கு நன்மை பயக்கக் கூடிய என் அன்பின் விளைவுகளே என அறிந்து கொள்க.

98. மனிதன் பெற்றுக் கொள்வதற் கெனவே சிறந்ததோர் பொக்கிஷத்தைக் கொண்டு வந்துள்ளேன் – அது பிற பொக் கிஷங்களைத் தன்னகத்தே கொண்டதா யும், நிலைத்து நீடிப்பதாயும், பிறருடன் பங்கிட்டுக் கொள்ளும்போது, பல்கிப் பெருகுவதாயும் இருக்கும். அதனைப் பெற்றுக் கொள்ள உன்னை நீ ஆயத்தப் படுத்திக் கொள்வாயாக.

99. நான் உங்கள் இதயங்களில் அன்பின் விதையைத் தூவுவதற்காகவே வந்துள்ளேன்...

100. இராமனாக, கிருஷ்ணனாக, இது அதுவாய் இருந்த நானே, இப்போது மெஹெர் பாபாவாக இருந்து வருகிறேன்.

**அவதார் மெஹெர் பாபா**

# சத்குருமார்களும், அவதார மகான்களும் (Sadgurus and Avatar)

உலகில் எந்தக் காலத்திலும் இறை உணர்வு மிக்க ஆன்மாக்களாக ஐம்பத்து அறுவர் இருந்து வருகிறார்கள். அவர்கள் அனைவருமே மெய்யுணர்வில் ஒத்த தன்மையினர் ஆவர்; ஆனால், வெவ்வேறு பணிகளில் அவர்கள் செயலாற்றி வருகின்றனர். பெரும்பான்மையும், அவர்கள் பொது மக்களுடன் தொடர்பின்றி, தம்மை வெளிப்படுத்திக் கொள்ளாமலேயே தம் பணிகளை ஆற்றிவருகின்றனர்; ஆனால், அவர்களில் செயலியக்கக் குழுமமாக உள்ள ஐவர் மட்டுமே எப்போதும் மக்களிடையே உடனிருந்து, அவர்களிடையே முதன்மையும் முக்கியத்துவமும் பெறுகின்றனர். இவர்களே சத்குருமார்கள் அல்லது முழு நிறைத் திறவோர் என அழைக்

கப் பெறுகின்றனர். அவதாரம் நிகழும் போது, அவதார மகான் ஒரு சிறப்பு வாய்ந்த சத்குருவாக, அந்தக் குழுமத்தின் தலைமைப் பொறுப்பேற்று ஆன்மீக மரபின் முதல்வராக இருந்து வருகிறார்.

அவதார யுகம் ஓர் சிருஷ்டியின் வசந்த அலையாகும். ஒரு சிலருக்கு மட்டுமல்லாது, அனைவருக்குமே, அது ஒரு புதிய ஆற்றலை வெளிப்படுத்தி, மெய்யுணர்வு விழிப்பினை ஏற்படுத்தி, ஒரு புதிய வாழ்க்கை அனுபவத்தைக் கொடுக்கிறது.

**மெஹெர் பாபா**

---

உண்மையின் தோற்றுவாயிலிருந்து வரும் சொற்களுக்குத் தகுந்த பொருள் காணக் கிடைக்கிறது; ஆனால், மனிதன் அந்தச் சொற்களைத் தன்னுடையதெனக் கூறிக் கொள்ளும் போது அவை பொருளற்றவையாகக் காணப்படுகின்றன.

**மெஹெர் பாபா**

# அவதார நோக்கம்

## (My Avataric Work)

நான் எந்த ஒரு சமயவழிபாட்டு மரபையோ, சங்கத்தையோ, அமைப்பையோ, ஏன், புதியதோர் மதத்தையோ, நிறுவுவதற்காக வரவில்லை. நான் வழங்கவிருக்கும் மதமானது, பன்மைக்குப் பின்னணியிலுள்ள ஒருமையைப் பற்றிய அறிவைப் 'போதிப்பதாக இருக்கும். மக்களை நான் படிக்க வைக்கும் நூல் ஆவது, வாழ்க்கையின் இரகசியத்தை வெளிக்கொணரும் திறவுகோலைக் கொண்டுள்ள இதய நூல் ஆகும். அறிவின் இருப்பிடமான மூளைப் பகுதியும், அன்பின் இருப்பிடமான இதயப் பகுதியும் இணைந்ததோர் இன்பியல் நிலையைக் கொண்டு வந்து இங்கு நிறுவுவேன்; எல்லா மதங்களுக்கும், சமய வழிபாட்டு மரபுகளுக்கும் மீண்டும் உயிர்த் திறனளித்து, ஒரு நூலில் கோத்துருவாக்கப்பட்ட மணிகளென அவற்றை அமைத்திடுவேன்.

மெஹெர் பாபா

# ACKNOWLEDGEMENTS

I hereby acknowledge with thanks, permission given by the Chairman, Avatar Meher Baba P. P. C. Trust, Ahmednagar, to quote the messages of Avatar Meher Baba.

I also express my gratitude to other Copyright holders, as well as K. Gopalan, T. Siva Chidambaram, C. Govindan and to all our donors and well-wishers.

*V. Sita Ramayya*
*Managing Trustee*
Avatar Meher Baba
Tamilnadu Centre




அமைவுற்ற மதங்களோ, மதங்களின் உட்பிரிவுகளோ இன்று மனித இனத்திற்கு உடனடியான தேவைப்பாடு அல்ல; அன்பு ஒன்றே தேவையானது.

– மெஹெர் பாபா